DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No. 306/2025**

Prosecution **PW.6**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | திரு.எம்.வீரராகவன் | கிராமம் : | |
| தந்தைபெயர் : | மாரியப்பன் | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 59 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.06.2026
எதிரிஆஜர் வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் கரூர் மாவட்டம், பாலவிடுதி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 10.01.2023 ம் தேதி லாலாப்பேட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக இருந்த போது குளித்தலை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தராஜேந்திரன் மற்றும் அவரது மனைவி மகேஷ்வரி ஆகிய இருவரையும் விசாரித்து மகேஷ்வரி என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்றும் லாலாப்பேட்டை காவல் நிலையக்குற்ற எண்.12/2023 இதச பிரிவுகள் 294(பி),323, 324, 506(2) மற்றும் 4 of TNPHW Act ன்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். (**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

2. பின்னிட்டு 10.01.2023 ம் தேதி மாலை 14.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் சண்முகசுந்தரம் (எ) மதன்குமார், ரஞ்சித் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். **பார்வை மகஜர் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அன்றைய தினமே 15.00 மணிக்கு சம்பவ இடத்தில் இருந்து சுமார் 42 செ.மீ நீளமுள்ள அரிவாள் ஒன்றை மேற்கண்ட சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் மூலம்

கைப்பற்றினேன். **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. சாட்சிகள் மகேஷ்வரி, ராஜேந்திரன், சுப்பிரமணி, சரவணன், ரவி, மதன்குமார், ரஞ்சித் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கின் சம்பவம் உண்மை என தெரியவந்ததன் பேரில் இந்த வழக்கின் எதிரி ரமேஷ் என்பவரை அன்றைய தினமே 17.00 மணிக்கு மகாதானபுரம் தென்புறம் பஸ் ஸ்டாப்பில் நின்ற எதிரி காரணம் கூறி கைது செய்து நீதிமன்றக் காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் அ.சா.1 முதல் 3க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் செந்தில்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்துப்பதிவேடு, மற்றும் காயச்சான்றிதழ் பெற்றார்.

4. (அரசு தரப்பில் குவிமுச பிரிவு படி 294(3)ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு கீழ்க்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது. )
**(மகேஷ்வரி விபத்து பதிவேடு அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மகேஷ்வரி காயச்சான்றிதழ் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ராஜேந்திரன் விபத்து பதிவேடு அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ராஜேந்திரன் காயச்சான்றிதழ் அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**5.** பின்னர் இவ்வழக்கின் கைப்பற்றப்பட்ட சான்றுப்பொருளை படிவம்–95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **(படிவம் –95 அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இத்துடன் என் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது 24.02.2023 அன்று இதச பிரிவுகள் 294(பி), 323, 324, 506(2) மற்றும் 4 of TNPHW Act ன்படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>1, 2 **எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**</u>

1. இவ்வழக்கில் காயம்பட்டதாக சொல்லப்படும் ராஜேந்திரன் என்பவரிடம் புகார் வாக்குமூலம் வாங்கவில்லை என்றால் சரிதான். அ.சா.1, மகேஸ்வரி அ.சா. 2 ராஜேந்திரன் ஆகியோர்களுக்கு சொந்தமான நிலத்தில் அவர்கள் வேலை செய்து கொண்டிருந்த போது எதிரி பிரச்சனை செய்தததாக தான் புகார் என்றால் சரிதான். அ.சா.1, 2 ஆகியோர்களுக்கு அந்த நிலம் சொந்தம் என்பதற்கு

எந்த ஆவணத்தையும் என்னுடைய விசாரணையில் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

2. அ.சா.2 ராஜேந்திரன் அண்ணன் நடேசன் என்பவர் ராணுவத்தில் பணிபுரிந்தார் என்ற விவரம் என் விசாரணையில் தெரியவந்தது என்றால் சரிதான். எதிரி ரமேஷ் ராணுவத்தில் பணிபுரிந்தார் என்ற விவரம் எனது விசாரணையில் தெரியவில்லை என்றால் சரிதான். அ.சா.1 எனது விசாரணையில் எனது கணவர் அண்ணன் நடேசன் என்பவர் ராணுவத்தில் சிறப்பாக பணியாற்றிதற்காக அரசாங்கத்தால் வழங்கப்பட்ட நிலம் தான் நாங்கள்பயன்படுத்தி வந்த நிலம் என்றும், நடேசன் இறப்பிற்கு பிறகு எதிரி ரமேஷ் சித்தலவாயில் குடியிருந்து வந்து அந்த நிலத்தை அவர் பயன்படுத்தி வந்தார் என்று எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

3. இந்த வழக்கின் சாட்சிகள்அனைவரும் அ.சா.1 ன் உறவினர்கள் தான் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் கரிசல் காடு, முள்காடு என்றால் சரிதான். 4 1/2 ஏக்கரில் எந்த இடத்தில் சம்பவம் நடந்தது என்று புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். காயம் பட்ட அ.சா.1, 2 ஆகியோர்கள் தெரிந்த ஆண் நபர் ஒருவர், பெண் நபர் ஒருவர் எங்களை தாக்கியதாக மருத்துவரிடம் கூறினார்கள் என்றால் சரிதான். அ.சா.1 கொடுத்தத புகார் வாக்குமூலத்தில் மேற்கண்டவாறு கூறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

4. அ.சா.3 சரவணன் இந்த வழக்கின் சான்றுப்பொருள் (அரிவாள்) ஒன்று என்னிடம் ஒப்படைத்தார் என்றால் சரிதான். எதிரியின் தகப்பனார் நடேசன் என்பவருக்கு சொந்தமான இடத்தை அ.சா.1, 2 ஆகியோர்கள் எதிரியிடமிருந்து அபகரிக்கவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் நடக்காத சம்பவத்தை நடந்ததாக பொய்யாக புகார் வாக்குமூலம் கொடுத்துள்ளார்என்றாலும் நான்

சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் எதிரி மீது பொய்யாக வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

5. அ.சா.1, 2 சொந்தமான இடம் அங்கில்லை என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் சான்றுப்பொருளை கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் அ.சா.1 முதல் 3 நபர்களுக்குள் ஏற்பட்ட தள்ளுமுள்ளு காரணமாக சம்பவம் நடந்நதாக சொல்லப்படும் இடத்தில் உள்ள சீத்தைமுள் காட்டில் விழுந்ததால் ஏற்பட்ட காயத்தை காரணம் காட்டி அ.சா.1 பொய்யான புகார் வாக்குமூலம் கொடுக்கப்பட்டு சாட்சிகள் சரிவர விசாரிக்கப்படாமல் எதிரிமீது பொய்யாக இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

6. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அ.சா.1 டம் வெற்றுத்தாளில் கையொப்பம் மட்டும் பெற்றுக்கொண்டு வழக்கிற்கேற்றாற போல் நான் புகார் வாக்குமூலம் தயார் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. குற்ற இறுதி அறிக்கையில் சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.08 13:17:55 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.